உ

சிவமயம்

அண்ணாமலை வெண்பா

ஆசிரியர்:

குருநமச்சிவாயர்

விளக்கம்:

'தமிழ்க்கடல்' 'சிவமணி'

'சிவம்பெருக்கும் சீலர்'

ராய. சொ.

வெளியீடு:

எம். கே. கந்தசாமி முதலியார்

சேலம்

பி. கந்தசாமி முதலியார்

திருவண்ணாமலை

1970

உ
சிவமயம்

அண்ணாமலை வெண்பா

ஆசிரியர்:

குருநமச்சிவாயர்

விளக்கம்:

'தமிழ்க்கடல்' 'சிவமணி'
'சிவம்பெருக்கும் சீலர்'

ராய. சொ.

வெளியீடு:
எம். கே. கந்தசாமி முதலியார்
சேலம்
பி. கந்தசாமி முதலியார்
திருவண்ணாமலை
1970

விலை 25 காசு

விற்பனைத் தொகை திருவண்ணமலைத்
திருப்பணிக்குச் சேரும்

14-2

உ
சிவமயம்

அண்ணாமலை வெண்பா

நூல்முகம்

அண்ணாமலை வெண்பா, அண்ணாமலை அண்ணலைக் குறித்து, சிதம்பரம் குரு நமச்சிவாய சுவாமிகள் பாடிய நூறு பாடல்கள் கொண்ட நூல். இப் பெரியார் குகை நமச்சிவாயரைக் குருவாகக்கொண்டு அருள் பெற்றவர். இவர்தம் பாடல்கள் தேனினும் இனியன. இவர் காலம் சுமார் நானூறு ஆண்டுகட்கு முன் என்ப.

வெண்பாவின் அமைப்பு அருமையானது. எல்லாப்பாடலும் "அண்ணாமலை" என்றே முடிவுறுகின்றது.

இரண்டாவது பதிப்பாக இந்நூலை முழுதும் குறிப்புரையுடன் வெளியிடுகின்றோம். இதனை, சேலம், ஜவுளிவியாபாரம் திரு. எம். கே. கந்தசாமி முதலியார் அவர்களும், அவர்கள் மருகர், திருவண்ணாமலை ஜவுளிவியாபாரம் நடராசா டெக்ஸ்டைல்ஸ் திரு. பி. கந்தசாமி முதலியார் அவர்களும் வெளியிடுகிறார்கள். இவ் இரு அன்பர்களும் நீண்டகாலமாக, திருவண்ணா

மலைத் திருக்கார்த்திகைப் பெருந்தீபத்துக்கு ஆண்டுதோறும் தீபரெட்டு அளித்துவருகின்றனர்; சைவப்பற்று மிக்கவர்; அண்ணாமலையாரிடம் அளவுகடந்த பத்தியுடையவர்.

இவர் இந்நூலை அன்பளிப்பாக வெளியிட்டு, அண்ணாமலையார் கோவிலுக்கு அளித்திருக்கின்றனர். விற்றுவரும்தொகை, அண்ணாமலையார் திருப்பணிக்குப் பயன் படுத்தப் பெறும். இவர்களுக்கு வாழ்த்து.

காரைக்குடி.
5—12—70

ராய. சொ.

உ

சிவமயம்

அண்ணாமலைவெண்பா

காப்பு

மன்னுதிரு அண்ணா
மலைமாலை, நாயடியேன்
பன்னுதமிழ் வெண்பாவிற்
பாடவே,—துன்னுமலர்ப்
பாதனே! மூடிகத்தின்
பால்ஏறும் தேவ!கண
நாதனே! நீமுன் நட.

மன்னும்: நிலைபெற்ற.
பன்னுதமிழ்: சொல்லத்தக்கதமிழ்.
துன்னும்: நெருங்கிய,
மூடிகம்: பெருச்சாளி.
கணநாதன்: கணபதி.

நூல்பயன்

அண்ணா மலைமாலை
ஆனதமிழ் வெண்பாவால்
தண்ஆரும் ஐந்தெழுத்தைச்
சாற்றியநூல்,—பண்ணாகக்
கற்றவர்கள், கேட்டவர்கள்,
காசினியில் பேரின்பம்
உற்றுஉலகை ஆள்வார் உவந்து.

மன்னுதிரு அண்ணா
மலையை,வலம் ஆகவந்துஉன்
உன்னுதிரு ஐந்தெழுத்தை
ஓதினேன்;—தென் அருணை
நாயகத்தைக் கோவிலிலே
நான்கண்டேன்; பெற்றுஎடுத்த
தாயகத்தைக் கண்டவர்பொன் தாள்.

தண்ணாரும் ஐந்தெழுத்து: குளிர்ச்சியைத் தரும் சிவாயநம என்ற திரு ஐந்தெழுத்து. பண்ணாக: இசை பொருந்த. காசினி: உலகம். உவந்து: களித்து.

தென்அருணை நாயகம்: தென்திசையிலுள்ள அண்ணாமலை அண்ணல்.

அண்ணாமலை வெண்பா

1 ஆதி,நடம் ஆடுமலை;
அன்றுஇருவர் தேடுமலை;
சோதிமதி ஆடுஅரவம்
சூடுமலை;—நீதி
தழைக்குமலை; ஞானத்
தபோதனரை 'வா' என்று
அழைக்குமலை, அண்ணா மலை.

2 அன்பர் பிறப்பை
அகற்றுமலை; அன்பர்அல்லா
வன்பர் பிறப்பை
வளர்க்குமலை;—அன்பை
வடிக்குமலை; சிங்கத்தை
வந்துசிம்புள் ஆகி
அடிக்குமலை, அண்ணா மலை.

---

1 ஆதி: முதற்கடவுளாகிய சிவபெருமான். இருவர்; திருமால், பிரமன். ஆடு அரவம்; ஆடுகின்ற பாம்பு.

2 வன்பர்: அன்புக்கு மாறுபட்டவர். சிம்புள்; எட்டுக்காலோடு கூடிய, சிங்கத்தைக் கொல்லும் ஓர் உயிரினம். சிங்கம்: நரசிங்கம்.

3 கூற்றை உதைத்தமலை;
கோமாறன் கூடல்வைகை
ஆற்றை அடைத்தமலை;
ஆரூரன்—போற்றச்
சிறந்தமலை; தீவினையேன்
செய்தகுறை எல்லாம்
மறந்தமலை, அண்ணா மலை.

4 ஏழைக்கு இரங்குமலை;
ஏதேது கேட்டாலும்
கோழை படாமல்
கொடுக்குமலை;—வேழம்
உரித்தமலை; அம்மைக்கு
ஒருபாகம் ஈந்த
மருத்துமலை, அண்ணா மலை.

---

3 கூற்று: எமன். கோமாறன்: பாண்டிய மன்னன். கூடல்: மதுரை. ஆரூரன்; சுந்தரமூர்த்திசுவாமிகள். திருவண்ணா மலைக்குச் சுந்தரர் தேவாரப்பதிகம் இப்போதுஇல்லை. எனினும் 'ஆரூரன் போற்றச் சிறந்தமலை' என்பது குறிப் பிடத்தக்கது.

4 கோழை படாமல்: அஞ்சாமல். வேழம்: யானை: மருத்து: மருந்தின் திரிபு.

5 கண்டம் கரியமலை;
கண்மூன்று உடையமலை;
அண்டர்எல்லாம் போற்றற்கு
அரியமலை; —தொண்டருக்குத்
தோற்றுமலை; நாளும்
தொழுவோர் எழுபிறப்பை
மாற்றுமலை, அண்ணா மலை.

6 அன்னமுடன் சொன்னம்
அளிக்குமலை; ஆதரிப்போர்
உன்னுவரம் எல்லாம்
உதவுமலை; —துன்னுபுகழ்
கொண்டமலை; அங்கிக்
கொழுந்துஆகி அண்டம்உற
மண்டுமலை, அண்ணா மலை.

---

5 கண்டம்: கழுத்து. கருமை: கறுப்பு; அது நஞ்சுஉண்டமையால் வந்தது. அண்டர்: தேவர். “கண்டம்கரியதாம்; கண் மூன்று உடையதாம்” என்பர் பட்டினத்து அடிகள்.

6 அன்னம்: சோறு. சொன்னம்: தங்கம். உன்னுதல்: நினைத்தல். துன்னுபுகழ்: நிறைந்த இசை. அங்கி: நெருப்பு. அண்டம்:வானம்.மண்டுதல்:நிறைதல்.

7 மா,மா தவநமச்சி
வாயன், தினம்ஒருவெண்
பாமாலை சாத்திப்
பணியுமலை; —காமாதி
என்னும்அலை தான்கடந்தோர்
இன்பத் திருஉளத்தே
மன்னுமலை, அண்ணு மலை.

8 அஞ்சுஅக் கரமாய்
அமர்ந்தமலை; ஆதரிப்போர்
வஞ்சக் கருவினையை
மாற்றுமலை;—நெஞ்சைத்
திருத்துமலை; மெய்ஞ்ஞான
சித்திதரும் தெய்வ
மருத்துமலை, அண்ணு மலை.

---

7 மாமாதவ நமச்சிவாயன்: சிறந்த பெருந்தவம் செய்த, குகை நமச்சிவாயர் என்னும் இந்நூலாசிரியரின் குரு. காமாதி என்னும் அலை: ஆசை முதலிய கடல்.

8 அஞ்சு அக்கரம்: திருஐந்தெழுத்து. வஞ்சக்கருவினை: மாயத்தைத் தரும் பெரியவினை.

9 தொண்டர் வலம்ஆகச்
சூழுமலை; சூழும்அவர்
பண்டைவினை எல்லாம்
பறிக்குமலை;—அண்டம்
உருவுமலை; எந்தைகுரு
ஓம்நமச்சி வாயன்
மருவுமலை, அண்ணு மலை.

10 கொம்பனைய பேதைக்
குறமகளிர், வானில்உறும்
அம்புலியி ஞேடுவிளை
யாடுமலை; —செம்பவளம்
ஒத்தமலை; சற்குருவாய்
ஓண்கழல்என் சென்னியின்மேல்
வைத்தமலை, அண்ணு மலை.

---

9 அண்டம் உருவுமலை: விண்ணைக் கடந்துசென்றமலை. எந்தைகுரு ஓம் நமச்சிவாயன்: குருவாகிய குகை நமச்சிவாயர்.

10 கொம்பு: மரத்தின்கிளை. குறமகளிர்: குறமாதர். அம்புலி: சந்திரன்.

11 ஞானகுரு நாதன்
நமச்சிவா யன்கருணை
ஆனபர னாகி,எனை
ஆண்டமலை; —வானவர்கள்
போற்றுமலை, தீவினையேன்
புந்திக் கவலைஎல்லாம்
மாற்றுமலை, அண்ணா மலை.

12 சரண கமலம்
தனைப்புகழும் தொண்டர்
மரண பவத்துயரம்
மாறக் —கருணை
பொழியுமலை; தட்டுப்
புழுகு,பனி நீரே
வழியுமலை, அண்ணா மலை.

---

11 புந்தி புத்தி:

12 சரணகமலம்: பாதத்தாமரை. மரண பவத்துயரம்:இறப்பு. பிறப்புத்துன்பம். தட்டுப்புழுகு: புனுகு பூனையின் சட்டத்தினின்றும் எடுக்கும் புழுகு. வழிதல்: கொட்டுதல்.

13 அன்பர் கருத்தில்
அனவரதம் மேவுமலை;
துன்பம் அகலத்
துரத்துமலை; —இன்பம்
விளைக்குமலை; செம்பொன்மக
மேருவினை வில்லா
வளைக்குமலை, அண்ணு மலை.

14 நண்பாக் குகையின்
நமச்சிவா யன்கருத்தில்
வெண்பாப் பயிராய்
விளையுமலை;—திண்பார்
அளந்தமலை; செஞ்சுடராய்
அன்று,இருவர் தேட
வளர்ந்தமலை, அண்ணு மலை.

---

13 அனவரதம்: எப்பொழுதும்.
துரத்துதல்: ஓட்டுதல்.

14 நண்பா: நட்பாக: திண்பார். வலிய உலகம். செஞ்சுடராய்: செவ்வியதீயாய். இருவர்: திருமால், பிரமன்.

15 சீதமல ரோன்,நெடுமால்
தேடுமலை; அன்பருக்குப்
பாதமலர் வீடாய்ப்
பலிக்குமலை;—மாதவர்கள்
மொய்த்தமலை; உண்ணு
முலைஉமையைப் பாகத்தில்
வைத்தமலை, அண்ணு மலை.

16 வைத்தநிதி ஓம்,நமச்சி-
வாயகுரு நாள்தோறும்
மெய்த்தமிழி ஞல்புகழ்ந்து
மேவுமலை;—எத்திசையும்
மின்னுமலை; மாதுடனே
வெள்ளிமலை வீடாக
மன்னுமலை, அண்ணு மலை.

---

15 சீதம்: குளிர்ச்சி. மலரோன்; பிரமன்.

16 மின்னுதல்: ஒளிவிடுதல். மாதுடனே: அம்பிகையுடன்.

17 முக்கோணம் ஆக
முளைத்தமலை; முண்டகன்,மால்
அக்கோடு நாகம்
அணிந்தமலை;—திக்கோடு
துன்னுமலை; தன்னைத்
துதிக்கும்அடி யார்உளத்தில்
மன்னுமலை, அண்ணா மலை.

18 வண்தமிழா லேநமச்சி
வாயகுரு ஏத்துமலை;
கண்டுதொழு வார்க்குஇனிய
காட்சிமலை; அண்டமுதல்
நீளுமலை; போற்றி
நினைக்கும்அடி யார்உளத்தே
வாழுமலை, அண்ணா மலை.

---

17 முண்டகன்; தாமரையிலிருக்கும் பிரமன். அக்கு: எலும்பு. நாகம்: பாம்பு.

18 ஏத்துமலை: போற்றுகின்றமலை.

19 அஞ்சுஎழுத்தாய், வேதமாய்,
ஆகமமாய், நின்றமலை;
விஞ்சுஎழுத்தாய், ஒன்ருய்,
விளங்குமலை; —நெஞ்சகத்தே
தைத்தமலை, நாயேனைத்
தன்அடியார் கூட்டத்தில்
வைத்தமலை, அண்ணு மலை.

20 மன்ஆளும் ஓம்நமச்சி
வாயகுரு செந்தமிழால்
பன்னளும் ஏத்திப்
பணியுமலை; —எந்நாளும்
மெய்க்குமலை; பொல்லா
வினையேனைத் தன்அடிக்கீழ்
வைக்குமலை, அண்ணு மலை.

---

19 விஞ்சுஎழுத்து: மேலான எழுத்து.

20 மன்: அரசன். பன்னளும்; பலநாட்களும்

21 எந்தை குருநாதன்
இருக்குமலை; என்பாச
பந்தம்அற நோக்கிப்
பரித்தமலை;—சந்திரனைத்
தேய்த்தமலை; நாயடியேன்
சிந்திக்கும் சிந்தனைக்கே
வாய்த்தமலை, அண்ணா மலை.

22 அஞ்ஞானக் கங்குல்
அகற்றுமலை; அன்பருக்கு
மெய்ஞ்ஞானச் சோதி
விளக்குமலை;— துஞ்ஞானச்
சந்தமலை; நாயேற்குத்
தந்தை,தாய் சற்குருவாய்
வந்தமலை, அண்ணா மலை.

---

21 குருநாதன்; குகைநமச்சிவாயர். பாசம்: ஆசை. பந்தம்: கட்டு. பரித்த; தாங்கிய.

22 அஞ்ஞானக்கங்குல்: அறியாமை இருள். துஞ்ஞானம்: புனிதமான அறிவு. சந்தம்: அழகு.

23 நீற்றை அணிந்தமலை;
நீள்சுடராய் நின்றமலை;
ஏற்றைப் பரியாக
ஏறுமலை; —கூற்றை
உதைத்தமலை; அன்றுஅரியை
ஓர்சிம்புள் ஆகி
வதைத்தமலை, அண்ணா மலை.

24 ஓலம்இடும் தேவர்குழாம்
உய்ய, திருமிடற்றில்
ஆலவிடம் தன்னை
அடக்குமலை; —நாலுமறை
அந்தமலை; நாயேனை
ஆளக் குருவாகி
வந்தமலை, அண்ணா மலை.

---

23 ஏறு: விடை. பரி: குதிரை. அரி: நரசிங்கம். சிம்புள்: சிங்கத்தை அடக்கும் பிராணி.

24 ஓலம்: அபயம் தேவர்குழாம்: அமரர் கூட்டம். உய்ய: கடைத்தேற. மிடறு: கழுத்து. ஆலவிடம்: ஆலகால நஞ்சு. நாலுமறைஅந்தம்: நான்கு வேதங்களின் முடிவு.

25 ஆதி, நெடுமால்,
அயன்காண அன்றுபரஞ்
சோதிச் செழும்சுடராய்த்
தோன்றுமலை; —வேதம்
முழங்குமலை; சிந்திப்பார்
முன்னின்று முத்தி
வழங்குமலை, அண்ணு மலை.

26 வந்துஉலகில் ஓம்நச்சி
வாயகுரு வாய்அடியேன்
சிந்தைகுடி கொண்டிருக்கும்
தெய்வமலை;— முந்தைவினை
நீக்குமலை; சொல்லரிய
நீள்பிறவித் துன்பம்எல்லாம்
மாய்க்குமலை, அண்ணு மலை.

---

25 ஆதி: சிவபெருமான்.

26 நீள்பிறவி: நீண்டபிறவி. மாய்க்கும்: அழிக்கும்.

27 சத்திக்கு ஒருபாகம்
தான்கொடுத்து நின்றமலை;
முத்திக்கு வித்தாய்
முளைத்தமலை; —எத்திசையும்
போற்றுமலை; போற்றிப்
புகழ்வார் எழுபிறப்பை
மாற்றுமலை, அண்ணுமலை.

28 வால மதியை
மௌலியின்மேல் வைத்தமலை;
சீலமுனி வோர்கள்
செறியுமலை; —காலம்
கடந்தமலை; சீறிவரும்
காலனைக்கா லாலே
அடர்ந்தமலை, அண்ணு மலை.

---

27 சத்தி: அம்பிகை, முத்திக்குவித்து: வீடுபேற்றுக்குவிதை.

28 வாலமதி: மூன்ரும்பிறை மௌலி: சடை. சீலம்: ஒழுக்கம். செறிதல்: நெருங்குதல் அடர்த்தல். அழித்தல்.

29 சிட்டர் இடரும்
சிவநீதி இல்லாத
துட்டர் சுகமும்
துடைக்குமலை; — நட்டம்
பயிலுமலை; எவ்உலகும்
பாழ்படும்என்று ஆலம்
அயிலுமலை, அண்ணு மலை.

30 கண்டம் இருளக்
கடுவிடத்தை வானவர்க்கா
உண்டுபிரான் ஆகி
உதவுமலை; —தொண்டர்
இணங்குமலை; வானேரும்
ஏனேரும் போற்றி
வணங்குமலை, அண்ணு மலை.

---

29 சிட்டர்: உயர்ந்தோர். இடர்: துயரம். துட்டர்: இழிந்தோர். துடைத்தல்: அழித்தல். நட்டம்பயிலுதல்: நடனம் ஆடுதல். ஆலம்: நஞ்சு. அயிலுதல்: உண்ணுதல்.

30 கண்டம் இருள: கழுத்துக் கறுக்க. கடுவிடம்: கொடுமையான நஞ்சு. இணங்குதல்: சேருதல்.

31 துன்பப் பசிதீர்க்கும்
சுத்த சிவஞான
இன்பப் பசும்தேன்
இருக்குமலை; —அன்பர்க்கு
இருளுமலை வாராமல்
எப்போதும் காட்சி
அருளுமலை, அண்ணா மலை.

32 செகமருவும் ஐம்புலனிற்
சேராமல், ஞானச்
சுகமருவ மேன்மைபுனை
தொண்டர்,—அகமருவும்
தூயமலை; வஞ்சகர்க்குத்
தோன்றும லேஒளிக்கும்
மாயமலை, அண்ணா மலை.

---

31 இருளுமலை வாராமல்: அஞ்ஞானம் மலைபோல் தோன்றுமல்.

32 செகம்: உலகம். ஐம்புலன்: பஞ்சேந்திரியம். ஞானச்சுகம்: அறிவு இன்பம். தூய: பரிசுத்தமான.

33 கரத்தில் இனிய
கனபொருளைத் தந்தும்,
சிரத்தில் அடிஇணையைச்
சேர்த்தும்,—பரத்தும்
இகத்து,மலை வாராமல்
என்குருவாய் ஆண்ட
மகத்துமலை, அண்ணு மலை.

34 பற்றி இமையோர்
பகைசெறுவான் வந்துஎதிர்த்த
வெற்றி மதராசன்
வேகவே,—உற்று
விழித்தமலை; தக்கனுர்
வேள்விதனை முன்னுள்
அழித்தமலை, அண்ணு மலை.

---

33 கரம்: கை. கனம்: நிறைந்த. சேர்த்தும்: சேர்ப்பித்தும். பரம்: விட்டு உலகம். இகம்: இவ்வுலகம். மலை: மலைப்பு. மகம்: சிறப்பு:

34 இமையோர்பகை: அசுரர்கள். செறுவான்: அழிக்கும்பொருட்டு. மதராசன்: மன்மத மன்னன். வேக: எரிந்துபோக. விழித்தமலை: நெற்றிக் கண் திறந்த கடவுள்.

35 பாடல் தனைவிரும்பி,
பாவலர்க்கா கப்பரவை
வீடு தனக்குஇருகால்
மேவியே,—கூட
இணக்குமலை; தன்புகழை
எண்திசைகள் தோறும்
மணக்குமலை, அண்ணு மலை.

36 கந்திக்கும் தேமாங்
கனிபறித்துக் கார்க்கடுவன்
மந்திக்கு நல்கி
மகிழுமலை;—சிந்திக்கும்
எண்ணமலை; அற்ருேர்க்கு
இனியமலை; ஓர்அஞ்சு
வண்ணமலை, அண்ணு மலை.

---

35 பாடல்: தேவாரப்பாடல். பாவலர்: சுந்தரர். பரவை: பரவைநாச்சியார், இருகால்: இரண்டுமுறை. இணக்கும் மலை: சேர்த்துவைக்கும் சிவபெருமான். மணக்கும் மலை: மணம் பரப்பச்செய்கின்ற மலைபோன்றவன்,

36 கந்திக்கும்: மணம் பரப்பும். கார்க்கடுவன்: கருமையான ஆண் குரங்கு. மந்தி: பெண் குரங்கு. அற்ருேர்: எளியவர். வண்ணம்: நிறம்.

37 உன்னு தவம்புரியும்
ஓம்நமச்சி வாயகுரு
மன்னும் கருணைமுகில்
வாழுமலை;—பென்னம்
பெரியமலை; மாலும்
பிரமனும் தேடற்கு
அரியமலை, அண்ணா மலை.

38 வேண்டும் அயன்,மால்
விழிமனத்துக்கு எட்டாமல்
நீண்டு தழல்பிழம்பாய்
நின்றமலை;—ஆண்ட
கருணைமலை; ஒப்புஉரைத்துக்
காண அரி தான
அருணமலை, அண்ணா மலை.

---

37 கருணைமுகில், அருள்மழை. தம்குரு வாழ்வதால் அண்ணாமலைக்கே சிறப்பு என்பது ஆசிரியர் கருத்து. பென்னம் பெரிய: மிகப்பெரிய.

38 தழல்பிழம்பு: தீக்கொழுந்து. அருணம் சிவப்பு.

39 வீடு முதலா
விரும்பும் பொருள்அனைத்தும்
பாடும்அடி யார்க்குப்
பலிக்குமலை;—நீடுபுகழ்
பூண்டமலை; சற்குருவாய்ப்
பொல்லாச் சிறியேனை
ஆண்டமலை, அண்ணு மலை.

40 அனைத்துஉலகும் போற்றுதிரு
ஐந்தெழுத்தை ஓதி,
தனைத்தொழுது பேணும்
தவத்தோர்—நினைத்தவரம்
நல்குமலை; எந்நாளும்
நல்லோரும் நன்னெறியும்
மல்குமலை, அண்ணு மலை.

---

39 வீடு: மோக்கம். நீடுபுகழ்: பெரும்புகழ்.

40 பேணுதல்: விரும்புதல். நல்குதல்: கொடுத்தல். நன்னெறி: நல்வழி. மல்குதல்: நிறைதல்.

41 மான்அனைய கண்ணார்
வசமாகி, நாயடியேன்
ஊனவினைக் காட்டில்
உழலாமல்,—ஞானநெறி
காட்டுமலை; தன்னைக்
கருதும்அலை யார்இடரை
வாட்டுமலை, அண்ணா மலை.

42 பிள்ளை அறுத்துஉதவும்
பேரா ளனைஉவந்து
கொள்ள வயிரவமெய்க்
கோலமாய்,—மெள்ள
நடந்தமலை; சிம்புளாய்
நாரசிங்க ரூபை
அடர்ந்தமலை, அண்ணா மலை.

---

41 மான் அனைய கண்ணார்: மான்கண் போன்ற கண்ணிணையுடையபெண்கள். ஊனவினைக்காடு: இழிந்தவினையாகிய காடு. உழலுதல்: தடுமாறுதல் அலையார் இடர்: அலைபோன்று தொடர்ந்து வருகின்ற துன்பம்.

42 பிள்ளைஅறுத்து உதவும் பேராளன்: சிராளனாகிய பிள்ளையை அறுத்துக் கறி சமைத்துக் கொடுத்த சிறுத் தொண்ட நாயனார். கோலம்: வடிவு. நாரசிங்க ரூபை: திருமால் எடுத்த நரசிங்க வடிவத்தை.

43 உய்யவரம் தந்துஅருளும்
ஓம்நமச்சி வாயகுரு
வையம்முழு தும்துதிக்க
வாழுமலை;—துய்யவரம்
தேக்குமலை; நல்லோர்
செறியுமலை; பெண்ணை ஆண்
ஆக்குமலை, அண்ணு மலை.

44 உண்ணு முலையாள்
ஒருபாகம் ஆனமலை;
கண்ணூர் அமுதாய
காட்சிமலை;—விண்ணோர்
துதிக்குமலை; அன்பர்
தொழுதுஏத்தி நாளும்
மதிக்குமலை, அண்ணு மலை.

---

43 துய்ய: தூய்மையான. தேக்குதல்: சேர்த்து வைத்தல். செறிதல்: நெருங்குதல்.

44 "கண்ணூர்அமுது" என்பது மாணிக்க வாசக சுவாமிகளும் சேக்கிழார் அடிகளும் ஆண்ட சொல்தொடர்.

45 நாதன்அரு ளான
நமச்சிவா யன்கனிவாய்
ஓதுதமிழ் மாலை
உகந்தமலை;—பாதிமதி
சூடுமலை; பத்திசெயும்
தொண்டருடன் கூடி,விளை
யாடுமலை, அண்ணு மலை.

46 தேவரையும் தேவருக்குத்
தேவராய்ச் செப்பும்ஒரு
மூவரையும் மண்ணோர்,
முனிவரையும்—யாவரையும்
பெற்றமலை; தன்பெருமை
பேசுங்கால், தாய்,தந்தை
அற்றமலை, அண்ணு மலை.

---

45 உகந்த: மகிழ்ந்த. பாதிமதி. பிறைச் சந்திரன்.

46 ஒருமூவர்: பிரமன். மால், சிவன் ஆகிய மும்மூர்த்திகள். தாய், தந்தை அற்ற மலை: பெற்றவரில்லாத கடவுள்.

47 நேசிக்கும் அன்பர்
நினைவுகொடு பாவித்துப்
பூசிக்கும் பூசை
பொருந்துமலை;—ஆசைக்குள்
வீழுமலை; பற்றுஒழிந்த
மெய்அடியார் நெஞ்சகத்தில்
வாழுமலை, அண்ணு மலை.

48 நன்றிபுனை நண்பன்
நமச்சிவா யன்தினமும்
துன்றுமலர் தூவி,
துதிக்குமலை; அன்றுஇருவர்
தேடுமலை; சந்ததமும்
தில்லைச்சிற் றம்பலத்தே
ஆடுமலை, அண்ணு மலை.

---

47 நேசித்தல்: விரும்புதல். பாவித்து: எண்ணி. ஆசைக்குள் வீழு மலை: பத்திவலையில் படுவோன்.

48 துன்றுமலர்: நிறைந்த பூ. சந்ததம்: எப்போதும்.

49 நெஞ்சகத்தில் ஒன்றி
நினைப்பார்க்கு மால்அறியாக்
கஞ்சம்ஒத்த பொன்னடியைக்
காட்டுமலை;—அஞ்சுஎழுத்தின்
நாமமலை; அம்பிகை,உண் -
ணாமுலைஅம் மைக்குஉகந்த
வாமமலை, அண்ணா மலை.

50 புன்தலையின் மாயன்
புவிஇடந்தும் காணஅரிய
நன்றிதரும் பொன்னடியை
நாடியே,—என்றும்ஒரு
நாளும்அலை வாராமல்
நாயேனைச் சற்குருவா
ஆளுமலை, அண்ணாமலை.

---

49 ஒன்றி:ஒருமனப்பட்டு.கஞ்சம்:தாமரை. அஞ்செழுத்தின் நாமம்மலை: திருஐந் தெழுத்தின் பெயராகிய இறைவன். வாமம்மலை: இடப்பாகத்தை அருளிய எம்பிரான். 'ஒன்றி இருந்து நினை மின்கள்' என்பர் அப்பர் அடிகள்.

50 இடந்தும்: தோண்டியும். அலைவாரா மல்: கெடுதல் அடையாமல்.

51 சண்ட விடத்தைச்
சகம்இறந்து போகாமல்,
கொண்ட திறம்பாடி,
கொண்டாடி,—தொண்டர்
பணியுமலை; மெய்முழுதும்
பால்வெள்ளை நீற்றை
அணியுமலை, அண்ணு மலை.

52 தில்லைவனம், காசி,
திருவாரூர், தென்மதுரை,
நெல்லையிலும் பேர்ஒளியாய்
நின்றமலை;—தொல்லைமறை
பாடுமலை; சந்ததமும்
பத்தர்அகம் மேவி,நடம்
ஆடுமலை, அண்ணு மலை.

---

51 சண்டவிடம்: கொடிய நஞ்சு. சகம் இறந்து போகாமல்: உலகம் அழிந்து போகாமல். மெய்: உடம்பு. பால்வெள்ளை நீறு: பால்போன்ற வெண்மையான திருநீறு.

52 நெல்லை; திருநெல்வேலி. தொல்லை மறை: பழைய வேதம். அகம் மேவி: உள்ளே பொருந்தி.

53 மூலமுதல், உண்ணு
முலைஎன்றும் அன்பருக்குச்
சாலவரம் ஈந்தருளும்
தாம்என்று,—நாலுமறை
பேச,மலைப் பாகம்
பிரியாச் சிவஞான
வாசமலை, அண்ணு மலை.

54 தொல்நாவல் சுந்தரற்காத்
தூதுபோய் வந்தமலை;
நன்மைதரத் தொண்டருக்கு
நல்குமலை;—மன்மதனைக்
காய்ந்தமலை; கூடலில்சங்
கத்தா ருடன்,தமிழை
ஆய்ந்தமலை, அண்ணு மலை.

---

53 மூலமுதல்: ஆதிக்கடவுளாகிய சிவபெருமான். என்றும்: எப்பொழுதும். சாலவரம்: நிறைந்தவரம். தாம்என்பது அம்மையையும், அப்பனையும் குறிக்கும். மலைப்பாகம் பிரியா: அண்ணுமலைப் பகுதியை விட்டு நீங்காத. சிவஞான வாசம்: சிவஅறிவுமணம்.

54 நாவல்: திருநாவலூர். சுந்தரற்கா; சுந்தரமூர்த்திகளுக்காக. கூடல்: மதுரை. சங்கத்தார்: மதுரைத் தமிழ்ச்சங்கத்தார். ஆய்ந்த: ஆராய்ந்த.

55 புண்டரிகன், மால்தேடிப்
பொன்முடியும் பொன்னடியும்
கண்டறிய ஒண்ணுத
காட்சிமலை;—தொண்டருடை
ஊனமலை, பற்றறுக்க,
ஓம்நமச்சி வாயகுரு
வானமலை, அண்ணு மலை.

56 துன்றுமலர், சோலைதொறும்
சூழுமலைச் சோனைஎன
மன்றல் கமழும்
மதுமாரி,—என்றும்
பொழியுமலை; மாருமல்
பூஞ்சுனைநீர் பொங்கி
வழியுமலை, அண்ணு மலை.

---

55 புண்டரிகன்: தாமரையிலிருக்கும் பிரமன். புண்டரிகன் பொன் முடியும், மால் பொன்னடியும் கண்டறிய எனக் கூட்டுக. ஒண்ணுத: முடியாத. ஊன மலை பற்றறுக்க: மலை போன்ற குறை களின் பிடிப்பைப் போக்க.

56 துன்று மலர்: நிறைந்த பூவானது. சோனை: மிகுதி. மன்றல்: மணம். மது மாரி: தேன்மழை. பூஞ்சுனை: மலர் மல்கிய நீர் நிலை.

57 வேட்ட அடியார்
விளக்கும் சிவஞான
நாட்டம் பொழிபேர்ஆ
னந்தநீர்—ஆட்டக்
குளிக்குமலை; நாளும்
குறைவுஇலாச் செல்வம்
அளிக்குமலை, அண்ணா மலை.

58 நீலமலை தேடரிதாய்
நின்றமலை; நின்றதழல்
கோலமலை; குன்றம்
குனிக்குமலை;—மூலமலை;
அந்தமலை; சுந்தரர்க்கா
அன்றுஇரவில் தூதுபோய்
வந்தமலை, அண்ணா மலை.

---

57 வேட்ட: விரும்பிய. நாட்டம்: அருட் கண்அளி,

58 நிலமலை: நீலநிறமுடைய மலைபோன்ற திருமால். குன்றம் குனிக்கும் மலை: மேருமலையை வில்லாக வளைத்தஇறை.. மூலமலை: ஆதிமலை. அந்தமலை: முடிவு மலை. சுந்தரர்க்கா: சுந்தர மூர்த்தி நாயனருக்காக.

59 தரைஎலாம் உய்யத்
தனித்திருந்து செய்யும்
கரைஇலா மாதவத்தைக்
கண்டு,—விரவிஒரு
பாகம்,மலை மாதுபெறப்
பாலித்து நின்றுஅருளும்
மாகமலை, அண்ணு மலை.

60 கள்ளப் புலவேடர்
கைவசமா கக்கனிந்து
தெள்ளத் தெளிந்தோர்
செறிவாக,—விள்ளக்
கருத்துமலை யாதுஇருக்கக்
காட்சிதரும் தெய்வ
மருத்துமலை, அண்ணு மலை.

---

59 தரைஎலாம்: உலகமுழுவதும். உய்ய: கடைத்தேற. கரை இலா: அளவுகடந்த. விரவி; கலந்து. ஒருபாகம்: ஒருபக்கத்தை. மலைமாது:அம்பிகை. பாலித்து: அருள்சுரந்து. மாகம்: வானம்.

60 கள்ளப்புலவேடர்: ஐம்புலனுகியவஞ்சக வேடத்தையுடையவர்தெள்ளத்தெளிந்தோர்: நன்கு ஆய்ந்து முடிவுகட்டியவர். விள்ள: சொல்ல. மலையாது இருக்க: மலைப்புஉண்டாகாது இருக்க. மருத்து மலை; மருந்துமலை.

61 முக்குணமும் ஐம்புலனும்
மூளா வகைஅடக்கி,
ஒக்கும்உணர் வாஇருப்போர்
உள்ளத்தே,—புக்குஉலவும்
பாதமலை; தாய்வயிற்றில்
பார்மீதில் வந்துபிற-
வாதமலை, அண்ணா மலை.

62 பண்அடுத்த கூடல்
பழம்பதியில், பிட்டமுதை
உண்ணஅடுத்து, வைகை
உடையாமல்,—மண்எடுத்துப்
போடுமலை; சந்ததமும்
பொன்னம் பலத்தில்நடம்
ஆடுமலை, அண்ணா மலை.

---

61 முக்குணம்:சத்துவம்,ராசஸம்,தாமதம். ஐம்புலன்: மெய், வாய். கண், மூக்கு, செவி. மூளாவகை: மேலோங்காமல். பாதமலை: கடவுளின் திருவடித்தாமரை.

62 பண்: இசை. கூடல்பழம்பதி: மதுரை மூதூர். சந்ததம்: எப்பொழுதும், பண்சுமந்தபாடல்என்பதுதிருவாசகம்.

63 அண்டமுழு தும்பறந்தே
அன்னஉரு வாய்த்தேடி,
மண்டலம்எ லாம்கோல
மாய்த்தேடி,—புண்டரிகன்,
சீர்க்கமலை கோன்அறியாத்
தெய்வச் சிவஞான
மார்க்கமலை, அண்ணா மலை.

64 கூனல் சிறுபிறையைக்
கோள்அரவுக்கு அஞ்சாமல்
வான்அப்பு அணிசடைமேல்
வைத்தமலை;—ஞானச்
சரதமலை; ஆனந்தத்
தாண்டவத்துக்கு ஏற்ற
வரதமலை, அண்ணா மலை.

---

63 அண்டம்: உலகம். மண்டலம்:உலகம். கோலம்: பன்றி. புண்டரிகன்: பிரமன். சீர்க்கமலை கோன்: சிறந்த திருமகள் தலைவனாகிய திருமால்.

64 கூனல் சிறுபிறை: வளைந்த இளந் திங்கள். கோள்அரவு: நஞ்சைத்தன் அகத்தே கொண்ட பாம்பு. வான்: சிறந்த. அப்பு: நீர்; ஈண்டுக்கங்கை. சரதம்: உறுதி. வரதம்: வரம்.

65 பொருந்து,தலைச் சங்கப்
புலவர்தமைப் போலே
விரிந்தபுகழ்க் கூடலிலே
மேவி, —அருந்தமிழை
ஆய்ந்தமலை; பார்மீதில்
ஐந்துஎழுத்தன் ஆகிவந்து
வாய்ந்தமலை, அண்ணு மலை.

66 ஆதிமலை; ஆதி
அநாதிமலை; அம்மைஒரு
பாதிமலை; ஓதிமறை
பாடுமலை;—நீதிமலை;
தந்த்ரமலை; அந்த்ரமலை;
சாற்றியபஞ் சாக்கரமாம்
மந்த்ரமலை, அண்ணு மலை.

---

65 தமிழை ஆய்ந்தமலை: மதுரைச் சொக்கேசர்.

66 ஆதிமலை, ஆதிஅநாதிமலை: முதலாகியமலை; முதலும் முடிவுமாகிய மலையாகிய கடவுள். அந்தரம்: சிறந்த.

67 அஞ்சு புலனும்
அடக்கி, அறிவுடையோர்
வஞ்ச வினைப்பிறவி
மாயவே,—நெஞ்சில்
அழுத்துமலை;அன்பர்
அனவரதம் போற்றி
வழுத்துமலை, அண்ணு மலை.

68 கதித்தமுனி பாலகன்,மார்க்
கண்டனையே சீறிப்
பதைத்து வரும்
காலன்படவே—உதைத்தஒரு
வீரமலை; சற்குருவாய்
மேவி,எனை ஆண்டபட்ச
வாரமலை, அண்ணு மலை.

---

67 நெஞ்சில் அழுத்துதல்: உள்ளத்தில் பதியவைத்தல். அனவரதம்: நாள் தோறும். வழுத்தல்: போற்றிப் புகழுதல்.

68 கதித்த: சினந்த. முனி: மிருகண்டு. காலன்பட: எமன் அழிய. வாரம்: அன்பு.

69 இமயவரும் பத்தரும்,மா
கேசுரரும் காண,
சமயகுரு வாநந்தி
தாங்க,—உமைஒருபங்கு
ஆனமலை; வாக்கு, மனம்,
காயம் தமக்குஅரிய
வானமலை, அண்ணா மலை.

70 ஆத்தி, கடுக்கைமுதல்
ஆனமலர் ஐந்துஎழுத்தால்
சாத்தி, அடியவரும்
தக்கோரும்—ஏத்திப்
புகழுமலை; ஆங்குஅவரைப்
பொற்கொடியோடு எய்தி,
மகிழுமலை, அண்ணா மலை.

---

69 மாகேசுரர்: உருத்திரர். நந்தி: நந்தியம்பெருமான். வாக்கு: மொழி. மனம்: உள்ளம். காயம்: உடம்பு.

70 ஆத்தி: திருவாத்தி மலர். கடுக்கை. கொன்றைமாலை. சாத்தி: அணிந்து. பொற்கொடி: அம்பிகை.

71 மால்ஊன்றிச் செய்யும்
மணம்தகைந்து, சுந்தரனைக்
கால்ஊன்றி ஆள,
கருணையாய்—கோல்ஊன்றித்
தந்த விருத்த
சதுர்வே தியன்ஆக
வந்தமலை, அண்ணா மலை.

72 அறுகு மதியும்
அணிமுடிமேல் கூடல்
மறுகு தனில்,அடியார்
வாழ,—விறகு
சுமந்தமலை; போற்றிசெயும்
தொண்டர்அகம் தோறும்
அமர்ந்தமலை, அண்ணா மலை.

---

71 மால்ஊன்றி: மயக்கம்கொண்டு. மணம் தகைந்து: திருமணத்தைத் தடுத்து. சுந்தரன்: சுந்தர மூர்த்தி சுவாமிகள். கால்ஊன்றி ஆள: கடைத்தேறுமாறு ஆட்கொள்ள. கோல்ஊன்றி: கம்புக் கையனாய். விருத்தன்: கிழவன். சதுர் வேதியன்: நான்மறையும் உணர்ந்த வன்.

72 அறுகு: அறுகம்புல். மதி: திங்கள். கூடல் மறுகு: மதுரை வீதி. விறகு சுமந்தமலை: விறகு விற்றபெருமான்.

73 மட்டுஉலவு கஞ்ச
மலரோனும் மாயோனும்
திட்டமுடன் தேடித்
திகைத்தாலும்—எட்டரிய
ஞானமலை; பார்மீது
நால்உகத்தில் நாலுவடிவு
ஆனமலை, அண்ணு மலை.

74 மறைவடிவாம் சோமாசி
மாறன்மகம், தன்னில்
உறைவடிவாம் பங்கில்உமை
யோடு—நிறைவடிவாய்ச்
சென்றமலை; அந்தணர்சூழ்
தெய்வக் கனகமணி
மன்றமலை, அண்ணு மலை.

---

73 மட்டு: தேன். கஞ்சமலரோன்: தாமரை வாழ் பிரமன். நால் உகத்தில் நாலு வடிவு: நான்குயுகத்தில் நான்குவடிவம்: தங்கம், வெள்ளி, செம்பு, கல் என்ப.

74 சோமாசி மாறர்: அறுபான் மும்மை நாயன்மார்களில் ஒருவர். மகம்: வேள்வி. சோமாசிமாறர் வேள்விக்கு, அம்பிகையோடு சிவபிரான் சென்றமை இங்குக் கூறப்படுகிறது. அந்தணர்: தில்லை மூவாயிரவர். கனகமணி மன்றம்: பொற்சபை.

75 எப்பொருளும் ஆகி
இருசுடர், பார்ஆக,
மெய்ப்பொருளும் ஆகி
விளங்குமலை;- கைப்பொருளை
ஒத்தமலை; என் தலைமேல்
ஓம் நமச்சி வாயன்அடி
வைத்தமலை, அண்ணு மலை.

76 பல்உயிரும் கேட்டுஅறியப்
பார்த்தன்கை யால்அடித்த
வில்அடியும், புத்தன்
மிகஎறிந்த—கல்எறியும்
பட்டமலை; மன்மதனைப்
பார்வையினுல் வெந்துவிழ
அட்டமலை, அண்ணு மலை.

---

75 இருசுடர்: மதி, இரவி. பார்: உலகம்.

76 பார்த்தன்: அருச்சுனன். புத்தன்: சாக்கியநாயனர். வில்அடியும் கல்எறியும் பட்டமலை: பார்த்தன் வில்லால் அடித்த அடியும், புத்தன் கல்லால் எறிந்த அடியும்பட்டபரமன். பார்வையினுல்: நெற்றிக்கண்ணுல். அட்ட: அழித்த.

77 வானை உருவ
வளர்ந்தமலை; வாம்பச்சைத்
தேனைஒரு பாகத்தில்
சேர்ந்தமலை;—யானை
அணித்திரள்சேர் சாரல்
அதில்,வேய்கள் ஈன்ற
மணித்திரள்சேர் அண்ண மலை.

78 அன்று கயிலை
அரக்கன் எடுத்தஅப்போ
நின்றுஅவனைக் காலால்
நெரித்தமலை;—என்றும்
அருத்துமலை, எவ்உலகும்;
அன்பர்இடர் நோய்க்கு
மருத்துமலை, அண்ண மலை.

---

77 வான்: ஆகாயம். உருவ: ஊடுருவ. வாம் பச்சைத்தேன்: விரும்பத்தக்க பசுமையான தேன்போன்ற உமையவள். அணித்திரள்: வரிசையான கூட்டம். வேய்கள்: மூங்கில்கள். மணித்திரள்: அரதனக் கூட்டம்.

78 அரக்கன்: இராவணன். நெரித்தமலை: நெரியுமாறுசெய்தஇறைவன்.அருத்துமலை எவ்வுலகும்: எல்லா உலகத்துக்கும் உணவு ஊட்டுகின்ற எம்பிரான்,

79 அன்றுபதி னாறுவயது
ஆனமார்க் கண்டர்தமக்கு,
என்றும்ஈர் எண்வயதே
என்றமலை;— நின்று
சிறக்குமலை; தன்அடியார்
செய்தகுறை எல்லாம்
மறக்குமலை, அண்ணா மலை.

80 அன்றுஇருவர் தேட
அனல்வடிவாய் நின்றமலை;
நின்றுஉருகும் தொண்டருக்கு
நேயமலை;—என்றும்
நடிக்குமலை; வேள்வியிலே
நாரணனை ஓட
அடிக்குமலை, அண்ணா மலை.

---

79 ஈர்எண்: பதினாறு.

80 நேயம்: அன்பு. நடிக்கும்மலை: கூத்தாடும்குழகன். வேள்வி: தக்கன் செய்த யாகம். நாரணன்: திருமால்.

81 நஞ்சுஅணியும் கண்டமலை;
நாளும் அடியவர்தம்
வஞ்சவினை தான்அறுக்க
வந்தமலை;—நெஞ்சை
இளக்குமலை; அன்பர்க்கு
இனியபேர் இன்பம்
வளர்க்குமலை, அண்ணா மலை.

82 பைஅரவம் சூடுமலை;
பத்தர்பணிந்து ஏத்துமலை;
கையில்மழு, மான்தரித்த
காட்சிமலை;—துய்ய
நதிஅணியும் வேணியின்மேல்
நாறுமலர்க் கொன்றை,
மதிஅணியும் அண்ணா மலை.

---

81 கண்டமலை: கழுத்தையுடைய இறைவன். இளக்குதல்: உருக்குதல்.

82 பை: படம். துய்ய: தூய்மையான. வேணி: சடை. நாறுதல்: மணத்தல்.

83 மயில்,அரவம் சேருமலை;
மான்,புலிகள் கூடிப்
பயிலுமலை; வானோர்
பரவும்—கயிலை
பொருந்துமலை; எந்நாளும்
போற்றும்அன்பர் நாவால்
அருந்துமலை, அண்ணா மலை.

84 உற்றுப் புரத்தில்
ஒருமூவர் தம்மைவைத்து,
பற்றி எரிந்துவிழப்
பார்த்தமலை;—நத்தியே
நாளும் தனைத்தேடி
நம்பும்அடி யார்தமையே
ஆளுமலை, அண்ணா மலை.

---

83 மயில்அரவம் சேருமலை: (பகையை விடுத்து) மயிலும் பாம்பும் கூடுமலை. மான்புலிகள் கூடிப் பயிலுமலை (அப்படியே) மானும் புலியும் சேர்ந்து விளையாடும் மலை. கயிலை பொருந்தும் மலை: திருக்கயிலாயத்தை ஒத்தமலை. நாவால் அருந்தும் மலை: வாயால் பருகும் பரம்பொருள்.

84 உற்று: பொருந்தி. ஒருமூவர்: மூன்று தலைவர். புரம்:முப்புரம். நத்தி: விரும்பி.

85 உள்ளும் புறமும்
ஒருசெயலாம் அன்பர்உளம்
கொள்ளுமலை; நாட்டம்
குளிக்குமலை;—துள்ளும்
எருத்தின்மேல் ஏறுமலை;
என்பிறவி நோய்க்கு
மருத்துமலை, அண்ணு மலை.

86 துன்பம் அகற்றுமலை;
தொல்வினையை நீக்குமலை;
அன்பர்தமை 'வா' என்று
அழைக்குமலை;—தன்பதத்தைக்
காட்டுமலை; தன்னைக்
கருத்தில்உறும் அன்பர்இடர்
வாட்டுமலை, அண்ணு மலை.

---

85 நாட்டம் குளிக்கு மலை: அருள் கண்ணோட்டம் உள்ள ஆண்டவன். துள்ளும் எருத்து: பாயும் விடை. "தான் பாயும்விடை ஏறும் சங்கரனார்" என்பர் அப்பர் அடிகள். எருது என்பது எதுகை நோக்கி இரட்டித்தது.

86 தன்பதம்: தன்னுடைய திருவடி. வாட்டுதல்: வருத்துதல்.

87 போதமுற்ற மெய்அடியார்
புந்தியிலே வேர்ஓடிப்
பாதம்,உச்சி மட்டாய்ப்
படர்ந்தமலை;— நாதம்
தழைக்குமலை; அன்பர்
தபோதனரை 'வா' என்று
அழைக்குமலை, அண்ணா மலை.

88 முப்போதும் பூசித்து,
மோகித்துப் போற்றும்அவர்க்கு
அப்போது முன்னின்று
அருளுமலை;—எப்போதும்
தாய்க்கும்இனி தானமலை;
சற்குருவாய் நாயேற்கு
வாய்க்குமலை, அண்ணா மலை.

---

87 போதம்: மெய்யறிவு. புந்தி: புத்தி. பாதம், உச்சிமட்டாய்: அடிமுதல் முடிவரை. நாதம்: ஒலி.

88 முப்போது: காலை, பகல், மாலை ஆகிய மூன்று பொழுது. மோகித்து: விருப்புற்று.

89 காலை உதைத்தமலை;
கையில்மான், சூலமலை;
வேலை விடம்அருந்தும்
வெற்றிமலை;— மாலை
அணிசேரும் நீள்முடிமேல்
அங்குஅரவம் ஈன்ற
மணிசேரும் அண்ணா மலை.

90 மாறுபட்ட தக்கன்உயிர்
மாய்த்தமலை; மால்அயற்கு
நீறுபட்ட செந்தழலாய்
நின்றமலை;—கூறுங்கால்
ஒப்பனைகள் இல்லாது
உயர்ந்தமலை; நீள்முடிமேல்
அப்புஅணியும் அண்ணா மலை.

---

89 காலை: காலனை. வேலை: கடல். அரவம் ஈன்றமணி: நாகரத்தினம்.

90 மாறுபட்ட: பகைத்துக்கொண்ட. ஒப்பனை: உவமை. அப்பு: நீர். (கங்கை)

91 பச்சைநிறம் தானாகிப்
பாதிவடி வானமலை;
கச்சைஎனக் கட்செவியைக்
கட்டுமலை;—நிச்சயமாய்
மாளும் அடியேனை
மாளா வகைஅருளி,
ஆளுமலை, அண்ணா மலை.

92 மான்ஒருகை, வெற்றி
மழுஒருகை யானமலை;
ஞானமுனி வோர்கள்நித்தம்
நாடுமலை;— யானை
உரித்தமலை; அம்மை
உமைபாலே யார்க்கும்
அருத்துமலை, அண்ணா மலை.

---

91 பச்சைநிறம் தானாகிப் பாதி வடிவான மலை: உடம்பில் ஒரு பகுதியில் பசுமை யான அம்பிகையைக்கொண்டஅப்பன். கச்சை: ஆடை நழுவாமல்கட்டும்கயிறு. கட்செவி: பாம்பு. "நல்லபுலி அதள் மேல் நாகம்கட்டி" என்பர் திருநாவுக் கரசு அடிகள்.

92 யானை உரித்தமலை: தாருகாவனத்து இருடிகள் ஏவிய யானையை உரித்த இறைவன். உமை பாலே யார்க்கும் அருத்துமலை,என்பது உலகம்எல்லாம் ஈன்றவள் உமைஎன்பதைக் குறிக்கும்.

93 முல்லைமலர், கொன்றை,
முடிமேல் அணிந்தமலை;
எல்லையில்லா மாதவர்கள்
ஏத்துமலை;—தில்லையிலே
நட்டமலை, முப்புரத்தை
நாடும்அன்பர் மூவரைவிட்டு
அட்டமலை, அண்ணு மலை.

94 எல்லாரும் காணற்கு
இனியமலை; என்னுடைய
பொல்லா வினைஅறுக்கப்
போந்தமலை;— சொல்ஆரும்
நல்லமலை; பொல்லாரை
நாசம்உறப் பார்க்கைக்கு
வல்லமலை, அண்ணு மலை.

---

93 நட்டமலை: நடனமாடிய கடவுள். மூவரைவிட்டு: மூன்றுபேரை ஏவி. அட்ட: அழித்த.

94 சொல் ஆரும்: புகழ் நிறைந்த. வல்ல: வல்லமை பொருந்திய.

95 ஆழி நெடுமால்
அயற்கும்அரி தானமலை;
ஊழின்வினை அன்பர்க்கு
ஒழிக்குமலை;— ஆழியிலே
நஞ்சு அழலைக் கண்டு
நடுங்கினரைக் காக்குமலை,
அஞ்சுமுகத்து அண்ண மலை.

96 எத்திசையும் தோற்றுமலை;
ஏறுஉகந்து நின்றமலை;
சித்திவரம் ஈந்துஅருளிச்
செய்தமலை;— முத்தர்மனம்
பூணுமலை; அண்டர்
புகழுமலை; நீண்டதொரு
மாணுமலை, அண்ண மலை.

---

95 ஆழி: சக்கரம்: அல்லது பாற்கடல். ஆழி. கடல். நஞ்சு அழல். நெருப்புப் போன்றவிடம். நடுங்கினர்: (இங்கே) அமரர்கள். அஞ்சுமுகத்து அண்ணமலை. ஐந்துமுகங்களையுடைய அண்ணமலை அண்ணல்.

96 ஏறு உகந்து நின்றமலை: மகிழ்ந்து விடை ஏறுகின்ற இறைவன். முத்தர்: முத்திநிலையை எய்தியவர். அண்டர்: அமரர். மாணும்: மாட்சிமைப்பட்ட.

97 வண்மைக் குணத்தவரை,
மாதவரை, வந்தடைந்தோர்
தம்மைத் தளராமல்
தாங்குமலை;— உண்மை
பொருந்துமலை; விண்ணவர்கள்
போகாமல் ஆலம்
அருந்துமலை, அண்ணா மலை.

98 வானத்துப் பூந்தருவை
வாங்கிக் களிறு,பிடி
யானைக்கு நீட்டி
அணையுமலை;— ஞானத்தர்
உன்னுமலை; எந்நாளும்
ஓம்நமச்சி வாயகுரு
மன்னுமலை, அண்ணா மலை.

---

97 வண்மைக் குணத்தவர்: வள்ளன்மை வாய்ந்தவர். விண்ணவர்கள் போகாமல்; தேவர்கள் அழிந்து போகாமல். ஆலம்: நஞ்சு.

98 வானத்துப் பூந்தரு: கற்பகம் முதலியன. வாங்கி: வளைத்து. களிறு: ஆண் யானை. பிடியானை: பெண் யானை, உன்னுதல்: நினைத்தல்.

99 அழியாத முத்தி
அளிக்குமலை; அன்பர்க்கு
ஒழியா வினையை
ஒழித்து,—கழியாத
ஏற்றுப் பிறப்பை
இனிஅமையும் என்றுஅருளி,
மாற்றுமலை, அண்ணு மலை.

100 பெற்றம் தனில்தோன்றிப்
பெய்வளையும் தானும்என்தன்
குற்றம் களைந்துஅருளிக்
கொண்டமலை;—நித்தம்
புதியமலை; கங்கைஅணி
பொற்சடைமேல் வைத்த
மதியமலை, அண்ணு மலை.

---

99 ஏற்றுப்பிறப்பை: வினையைத் தாங்கி ஏற்கும் பிறவியை. இனி அமையும்: இனிப்போதும்.

100 பெற்றம்: எருது. பெய்வளை: அம்பிகை.

பாட்டு முதற்குறிப்பு அகராதி

பாட்டு முதற்குறிப்பு அகராதி